நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம்
Nyborg Tamilsk Sports Klub
CVR 33732430 || Bank: 3914 – 9040071749
ntsk@ntsk.dk || www.ntsk.dk

**Revideret: januar 2020**

# யாப்பு

## § 1: கழகத்தின் பெயர்

| | |
|---|---|
| 1.1 | நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் |

## § 2: நோக்கம்

| | |
|---|---|
| 2.1 | விளையாட்டு சம்பந்தமான உடற்பயிச்சி, போட்டிகள் மற்றும் ஒன்று கூடல்கள் மூலமாக இக்கழகத்தை மென்மேலும் வளர்த்தெடுப்பதே நோக்கமாகும். |

## § 3: அங்கத்துவம்

| | |
|---|---|
| 3.1 | நியுபோ நகராட்சி தமிழர்கள் மட்டுமே இக்கழகத்தில் அங்கத்தவர் ஆகலாம். |

| | |
|---|---|
| 3.2 | நியுபோ நகராட்சிக்கு பக்கத்தில் இருக்கும் சிறு நகராட்சிகளில் வாழும் தமிழர்கள் ஒரு வருடத்திற்கு விசேட அங்கத்தவர்களாக கீழ்குறிப்பிட்ட 4 விடயங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளலாம்.<br>1. அவர்கள் நிர்வாக உறுப்பினராக இருக்க முடியாது.<br>2. அவர்களுக்கு வாக்குரிமை கிடையாது<br>3. அவர்களுக்கு நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்துடன் ஈடுபாடு இருக்க வேண்டும்<br>4. அவர்களின் அங்கத்துவம் ஒவ்வொரு வருடமும் நிர்வாகத்தால் மதிப்பிடப்பட வேண்டும்.<br>(Januar 2018) |

| | |
|---|---|
| 3.3 | ~~*13 வயதிற்கு மேற்பட்ட அங்கத்தினர் மட்டுமே பயிச்சி எடுக்கலாம் (23.01.2005)*~~ (நீக்கப்பட்ட சட்டம்)<br><br>10 வயதிற்கு மேற்பட்டவர்கள் மட்டுமே அங்கத்திவராகி பயிச்சி எடுக்கலாம் (Januar 2018 – Januar 2020) |

| | |
|---|---|
| 3.4 | இதுவரை நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தில் அங்கத்தவர்களாக இருக்காத, எந்த விளையாட்டுகளிலும் பங்குபற்றாதவர்கள் மட்டும், புதிதாக விளையாட விரும்புவர்கள், முதல் 2 தடவைகள் மட்டும் சந்தாப் பணம் கட்டாமல் பயிச்சி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்பு தொடர்ந்து விளையாட விரும்புவோர் சந்தாப் பணம் செலுத்த வேண்டும். |
| | |
| 3.5 | நியுபோ நகராட்சியை விட்டு வெளியேறியவர்கள் (உதாரணம்: படிப்பு அல்லது வேலை சம்பந்தமாக), நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தில் சந்தாப்பணம் செலுத்தி அங்கத்தவர் ஆகலாம்.<br><br>அதே சமயம் விளையாட்டுகளிலும் பங்குபெற்றலாம். |

| | |
|---|---|
| 3.6 | ~~சந்தாப் பணம் மாசி 15ம் திகதிக்குள் கட்டினர்கள் மட்டுமே அங்கத்தினர் என்று கருதப்படும். *(17.01.2009)*~~ (நீக்கப்பட்ட சட்டம்)<br><br>தை மாதம் 31ம் திகதிக்குள் சந்தாப்பணம் செலுத்தியவர்கள் மட்டுமே அங்கத்தினர் என்று கருதப்படும். *(Januar 2019)* |

# யாப்பு

| | |
|---|---|
| 3.7 | சந்தாப் பண விபரம் ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்தில் முடிவெடுக்கப் படும். இந்த விபரத்தையும் மற்றும் சந்தாப் பணத்தை செலுத்த வேண்டிய வங்கி விபரத்தையும் நிர்வாகம் பொதுக்கூட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படும். (Januar 2020) |

| | |
|---|---|
| 3.8 | அங்கத்தினர் கழகத்தை விட்டு விலகும் பட்சத்தில் எழுத்து ரீதியாக நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும். |

| | |
|---|---|
| 3.9 | அங்கத்தினர் நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தின் சட்டதிட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்து இருத்தல் மேண்டும். |

| | |
|---|---|
| 3.10 | மேலும் கழகத்தின் சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில், அவர்கள் அங்கத்தவர் உரிமையை இழப்பார்கள். |

| | |
|---|---|
| 3.11 | 1. விளையாட்டு மைதானத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் (கார்த்தரிப்பிடம், உடைமாற்றும் அறை) தனிப்பட்ட பிரச்சனைகளையும், விரோதங்களையும் தவிர்க்கப்பட வேண்டும்.<br>2. இச்சட்டத்தை மீறினால் விளையாட்டுகளில் இருந்து 3 மாதங்களுக்கு உடனடியாக நீக்கப்படுவார்கள்.<br>3. ஆனால் பிரச்சனையை பொறுத்து தண்டனைக் காலம் நீடிக்கப்படும்.<br>4. இதன் இறுதி முடிவு நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்படும்.<br><br>(Januar 2012) |

| | |
|---|---|
| 3.12 | சந்தா செலுத்திய அங்கத்தினர், கழகத்தின் அனைத்து விளையாட்டுகளிலும், போட்டிகளிலும் மற்றும் ஒன்று கூடல்களிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார். |

| | |
|---|---|
| 3.13 | 1. மேலும் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களை, அதற்குரிய அணித்தலைவர் மட்டுமே முடிவெடுப்பார்கள்.<br>2. பயிற்சியின் போதும் சகல விடயங்களும் அணித்தலைவர்களே முடிவேடுப்பார்கள்.<br>(Januar 1996) |

| | |
|---|---|
| 3.14 | நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் கலந்து கொள்ளாத பட்சத்தில் இக் கழகத்தின் வீரர்கள் வேறு அணிகளுடன் சேர்ந்து விளையாட அனுமதிக்கப்படுவார்கள்.<br>(Januar 1996) |

| | |
|---|---|
| 3.15 | 1. நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் பங்குபற்றும் போட்டிகளில் அவர்களை எதிர்த்து வேறு அணியில் சேர்ந்து விளையாடும் எமது கழக வீரர்கள், எமது கழகத்திலிருந்து முற்றாக விலக்கி வைக்கப்படுவார்கள். (Januar 1996)<br>2. வேறு அணிகளில் சேர்ந்து விளையாடும் இறுதி முடிவை நி.த.வி.க. அணித்தலைவர்தான் எடுப்பார். (Januar 2020) |

| | |
|---|---|
| 3.16 | போட்டிகளின்போதும் பயிற்சிகளின்போதும் தவறும் பொருட்களுக்கு அதில் பங்கு கொள்ளும் அனைத்து வீரர்களுமே பொறுப்பேற்க வேண்டும்.<br>(Januar 1996) |

| | |
|---|---|
| 3.17 | நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் நிகழ்வுகளின்போது வெளிஊரில் நடைபெறும் தமிழ்ச்சுற்றுப் போட்டிகளுக்கு சென்று மற்ற கழகங்களுடன் சேர்ந்து விளையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது.<br>(Januar 2015) |

| | |
|---|---|
| 3.18 | எல்லா விளையாட்டு தலைவர்கள் எடுக்கும் முடிவுகளை விளையாட்டு வீரர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.<br>(Januar 2015) |

| | |
|---|---|
| 3.19 | தண்டனைகளை முதல்த்தரம் அணித்தலைவர்களும், பிறகு அவ்வருட நிர்வாகமும் முடிவெடுப்பார்கள். இதற்கு எல்லா விளையாட்டு வீரர்களும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.<br>(Januar 2015) |

| | |
|---|---|
| 3.20 | நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தில் இருக்கும் அங்கத்தவர்கள் சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றும் போது, நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தின் பெயரின் கீழ் பங்கு பெற வேண்டும்.<br>(Januar 2017) |

| | |
|---|---|
| 3.21 | அங்கத்தவர்கள் கழகத்தை விட்டு விலகி, வேறு கழகத்தில் அங்கத்தவர் ஆகி, எமது கழகத்துடன் எதிர்த்து போட்டியிடும் பட்சத்தில்<br>1. திரும்ப நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தில் உடனே அங்கத்தவர் ஆக முடிடாது.<br>2. விலகிய திகதியிலிருந்து 12 மாதங்களுக்கு பின்பு தான் மீண்டும் அங்கத்தவர் ஆக முடியும்.<br>(Januar 2017) |

| | |
|---|---|
| 3.22 | ~~விளையாட்டுத் தலைவர் (பொறுப்பாளர்) சுற்றுப்போட்டிக்கு ஒரு விளையாட்டு வீரரை அனுமதிக்காமல் விட்டால், அந்த வீரர் வேறு கழகத்துடன் சேர்ந்து விளையாட முடியாது. (Januar 2017)~~ (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2020) |

| | |
|---|---|
| 3.23 | நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுப்போட்டிகளில் தமிழர்கள்தான் பங்குபெறலாம். அதாவது குறைந்த பட்சம் அவர்களின் ஒரு பெற்றோராவது இலங்கைத் தமிழராக இருக்க வேண்டும்.<br>(Januar 2018) |

| | |
|---|---|
| 3.24 | எமது கழகத்தால் நடாத்தப்படும் பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் இந்தியத் தமிழர்களையும் இணைத்து கொள்ளலாம்.<br>(Januar 2019) |

## § 4: கழகத்தின் அமைப்பு

| | |
|---|---|
| 4.1 | பொதுக்கூட்டம் தைமாதத்தில் கூடப்பட்டிருக்க வேண்டும். மேலும்<br>1. பொதுக்கூட்டம்தான் கழகத்தின் அதியுயர்ந்த அதிகாரபீடமாகும்.<br>2. விதிமுறைகள் பொதுக்கூட்டத்தில் மட்டுமே முடிவெடுக்கப்படும். |

| | |
|---|---|
| 4.2 | நியுபோ நகராட்சியில் வாழும் அனைத்து தமிழ் மக்களுக்கும் பொதுக்கூட்ட அழைப்பு அனுப்பப்படும். ஆனால் கழகத்தின் அங்கத்தவர்களுக்கே (Medlemmer og passive medlemmer) கூட்டத்தின்போது கருத்துரிமையும், வாக்குரிமையும் வழங்கப்படும். (Januar 2016)<br><br>பொதுக்கூட்ட அழைப்பு நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தின் அங்கத்தினருக்கு மின்அஞ்சல் அல்லது வேறு சமூக ஊடகங்கள் (Facebook) மூலமாக சென்றடைதல் வேண்டும்.<br>• மின்அஞ்சலோ அல்லது வேறு சமூக ஊடகங்கள் இல்லாத அங்கத்தினருக்கு மட்டும் பொதுக்கூட்ட அழைப்பு அவர்கள் கையில் ஒப்படைக்கப்படும்.<br>• கழகத்தின் அங்கத்தவர்களுக்கே (Medlemmer og passive medlemmer) கூட்டத்தின் பொழுது கருத்துரிமையும், வாக்குரிமையும் வழங்கப்படும்.<br>(Januar 2020) |

| | |
|---|---|
| 4.3 | இருக்கும் சட்டங்களை மாற்றி அமைக்க விரும்புவோர், பொதுக்கூட்டத்திற்கு 2 கிழமைகளுக்கு முன்னரே எழுத்து மூலம் நிர்வாகத்திற்கு அறிவிக்க வேண்டும். (Januar 2013) |

| | |
|---|---|
| 4.4 | பொதுக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்: (Januar 2020)<br>1. அகவணக்கம்<br>2. நெறியாளர் (Ordstyrer) தெரிவு<br>3. அறிக்கை எழுதுபவர் தெரிவு<br>4. தலைவர் உரை<br>5. செயலாளர் அறிக்கை<br>6. பொருளாளர் அறிக்கையும்<br>    a. வரவு, செலவு, இருப்பு கணக்குகளை ஆமோதித்தல்<br>7. அணித்தலைவர்களின் மற்றும் அரசாங்கத் தொடர்பாளர் உரை<br>8. ~~தற்காலிய தலைவர் தெரிவு~~ (நீக்கப்பட்ட சட்டம்)<br>9. புதிய நிர்வாகச் சபைத்தெரிவு (Januar 2017) *<br>    1. தலைவர் (2 வருடங்கள்) **<br>    2. செயலாளர் (2 வருடங்கள்) **<br>    3. செயலாளருக்கு உதவி<br>    4. பொருளாளர்<br>    5. பொருளாளருக்கு உதவி<br>    6. அரசாங்கத் தொடர்பு<br>    7. பூப்பந்தாட்டத் தலைவர்<br>    8. பூப்பந்தாட்டத் தலைவருக்கு உதவி<br>    9. கரப்பந்தாட்டத் தலைவர்<br>    10. கரப்பந்தாட்டத் தலைவருக்கு உதவி<br>    11. உதைப்பந்தாட்டத் தலைவர்<br>    12. உதைப்பந்தாட்டத் தலைவருக்கு உதவி<br>    13. நிர்வாக அங்கதினர்<br>    14. கணக்காளர் (<u>நிர்வாக அங்கத்தினர் அல்ல</u>)<br>10. வேறு விடயங்கள் (குறை, நிறைவுகளை கலந்துரையாடல்)<br>11. திகதிகள்:<br>    a. விளையாட்டுப் போட்டி<br>    b. பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி<br>    c. ஆண்டு இறுதி விழா |

| | |
|---|---|
| | d. அடுத்த வருடத்தின் பொதுக்கூட்டம்<br>e. அடுத்த வருடத்தின் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி<br><br>*) இலகுவாக புதிய நிர்வாகம் தெரிவதற்காக, சென்ற வருடத்திற்குரிய வேறு விடயங்கள் (குறை, நிறைவுகளை கலந்துரையாடல்) புதிய நிர்வாகம் தெரிந்த பின்பு ஆலோசிக்கப்படும். ஆனால் சென்ற வருடத்திற்குரிய நிர்வாகம் கட்டாயம் வேறு விடயங்களுக்குரிய கேள்விகளுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும்.<br><br>**) தலைவர் அல்லது செயலளார் தொடர்ந்து 2 வருடங்கள் விரும்பினால் நிர்வாகத்தில் இருக்கலாம். (Januar 2014) |

| | |
|---|---|
| 4.5 | இருக்கும் சட்டதிட்டங்களை மாற்றி அமைக்கவோ அல்லது புதிதாக ஆலோசிக்கப்படும் தீர்மானங்களை முடிவெடுப்பதற்கோ, பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்த அங்கத்தவர்களில் 2/3 க்கு மேற்பட்டோர் ஆமோதித்தல் வேண்டும். (Jf. Pkt. 4.2) |

| | |
|---|---|
| 4.6 | 1. சந்தாப்பணம் கடந்த வருடம் கட்டியிருந்தால் மாத்திரம் இவ்வருடம் எடுக்கும் தீர்மானங்களுக்கு வாக்களிக்க உரிமை உண்டு. (Januar 2014)<br>2. அங்கத்தவராக இல்லாதவர்கள் பொதுக்கூட்டத்திற்கு சமுகமளிக்கும் பட்சத்தில் அவர்கள் 100 Dkr. கட்டி passiv medlemmer ஆகி வாக்களிக்க உரிமை உண்டு. (Januar 2014)<br>3. ~~60 வயதிற்கு மேட்பட்டோர் கழகத்தால் நடைபெறும் ஒன்றுகூடல், ஆண்டு இறுதி விழாவிற்கு சந்தாப்பணம் கட்டாமல் பங்குபற்றலாம். (Januar 2014)~~ (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2019) |

| | |
|---|---|
| 4.7 | நிர்வாக அங்கத்தவர் தனது இயங்கும் காலமுடிவிற்கு முன்னர் நிர்வாகத்தை விட்டு விலகினால், மீதியுள்ள நிர்வாக அங்கத்தவர்கள் விலகியோரின் பொறுப்பையும் ஏற்று, தொடர்ந்து இயங்க வேண்டும். |

| | |
|---|---|
| 4.8 | Danehofskoleல் நடைபெறும் விளையாட்டு நேரங்களில் ~~13~~ 10 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் மைதானத்திற்கு வருவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. (Januar 2010) – Se pkt. 5.5 |

| | |
|---|---|
| 4.9 | நாளாந்த பொறுப்புகளை நிர்வாகத்தினர் பக்கசார்பற்று எடுக்கப்பட்ட சட்டதிட்டங்களின் கீழ் கொண்டுநடத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| 4.10 | 1. அவசர பொதுக்கூட்டம் கூடுவதாயின், நிர்வாகமோ அல்லது குறைந்தது 20 சதவீத அங்கத்தவர்களோ முடிவெடுக்க வேண்டும்.<br>2. அத்துடன் 8 நாட்களுக்கு முன்னர் அதை அறிவித்திருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| 4.11 | நியுபோ நகரில் நடைபெறும் பொதுநிகழ்ச்சிகளின் போது முதல் நாள் பயிற்சிகள் நடைபெறமாட்டாது. (Januar 2000) |

| | |
|---|---|
| 4.12 | ~~நிர்வாக அங்கத்தவர்கள் முடிவெடுத்து கழகத்தின் இருப்பில் உள்ள நிதியை, 1 சதவீத வட்டிக்கு ஏதாவது ஒரு அமைப்பிக்கு கொடுக்கலாம். இதற்கு நிர்வாக அங்கத்தவர்களே பொறுப்பு. (Januar 2002)~~ (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2010) |

**Revideret: januar 2020**

# யாப்பு

| | |
|---|---|
| 4.13 | ~~நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் ஏதாவது பொது அமைப்புகளுக்கு நன்கொடை வழங்குவதாயின் வருடத்திற்கு 500 Dkr. மட்டுமே வழங்கலாம். நிர்வாகம் எந்த அமைப்பிற்கு கொடுப்பதென்று முடிவெடுக்கும். (Januar 2004)~~ (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2010) |

| | |
|---|---|
| 4.14 | ~~விளாயாட்டு சம்பந்தமான விழாக்களிலும், ஒன்றுகூடுதல்களிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் மதுபானம் கொண்டுவருவதும் அருந்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. (Januar 2009)~~<br><br>பயிற்சிகளிலும் சுற்றுப்போட்டிகளிலும் மதுபானம் அருந்திவிட்டு பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். (Januar 2020) |

| | |
|---|---|
| 4.15 | ஆண்டு இறுதி விழாவிற்கு மட்டும் மதுபானம் விழாமண்டபத்தில் அருந்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (செலவு நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தால் வழங்கப்படமாட்டாது) (Januar 2010) |

| | |
|---|---|
| 4.16 | ஒவ்வொரு வருடமும் மாசி 15ம் திக்திக்குள் பொருளாளர், அரசாங்க தொடர்பாளருக்கு மொத்த அங்கத்தவரின் பெயர், பிறந்த திகதி, மாதம், ஆண்டு விபரம் கொடுக்கப்பட வேண்டும். (Januar 2019)<br><br>Ny blanket kan ses på hjemmesiden www.NTSK.dk |

| | |
|---|---|
| 4.17 | 1. ஒவ்வொரு அணித்தலைவரும் தங்கள் தங்கள் வீரர்கள் சந்தாப் பணத்தை தைமாதம் 31ம் திகதிக்குள் கட்ட வைப்பது அவர்களது பொறுப்பாகும்.<br>2. கட்டாவிடின், அந்த அணித்தலைவர் நிர்வாகத்திற்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| 4.18 | 1. ~~வெளியூரில், அதாவது Jylland அல்லது Sjællandல் மட்டும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் வீரர்களுக்கு போக்குவரத்து உதவியாக ஒரு மோட்டார்வண்டிக்கு (கார்) 250 Dkr. கொடுக்கப்படும்.~~ (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2014)<br>2. ~~பாலவரி கட்டவேண்டிய நிர்ப்பந்தத்தில் அதுவும் கொடுக்கப்படும்.~~ (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2014)<br><br>~~மூன்று விளையாட்டுகளுக்கும் 6.000 Dkr. வழங்கப்படும். இதற்குள் அனைத்து செலவுகளையும் அடக்கிக்கொள்ள வேண்டும். மேலதிக செலவுகளை அவ்வணியில் விளையாடுபவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். நிர்வாகம் பொறுப்பேற்காது. (Januar 2014)~~ (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2019)<br><br>1. மூன்று விளையாட்டுகளுக்கும் சமமாக 8.000 Dkr. ஒதுக்கப்பட்டுள்ளது. இதை கழகத்தின் விதிகளுக்கமைய அந்தந்த விளையாட்டுத் தலைவர்கள் செலவு செய்யலாம்.<br>2. ஆனால் விளையாட்டு உபகரணங்கள் அதாவது பந்து, பூப்பந்தாட்ட பூ ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கி செலவு செய்வதோடு அதை எப்படி செலவு செய்தார்கள் என்பதற்குரிய உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பொருளாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.<br>(Januar 2019) |

# யாப்பு

| | |
|---|---|
| 4.19 | www.NTSK.dk என்ற இணையத்தளத்தில் நியுபோவில் நடாத்தப்படவிருக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளலாம். |

| | |
|---|---|
| 4.20 | நிர்வாக அங்கத்தவர் ஒருவர் நிர்வாகத்தை விட்டு வெளியேறும் சமயத்தில், அதாவது அவர் சில பிழைகளை விட்டு விட்டு எந்தவித காரணங்களையும் நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்திற்கு அறிவிக்காத அல்லது மன்னிப்பு கூறாத பட்சத்தல் அவர் நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தின் நிர்வாகத்தில் ஏற்றக்கொள்ளப்படமாட்டார். (Januar 2010) – se pkt. 4.8 |

| | |
|---|---|
| 4.21 | ~~சந்தாப்பணம் பங்குனி 1ம் திகதிக்கு முன்பு செலுத்தப்பட வேண்டும்.~~<br>Se punkt 4.17. (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2020) |

| | |
|---|---|
| 4.22 | எதிர்வரும் காலங்களில் நடைபெற இருக்கும் விசேட ஆண்டு விழா நடாத்துவதற்கு, முன்பு ஏற்கனவே நிர்வாகத்தில் இருந்த உறுப்பினர்களை சேர்த்து ஒன்றுகூடி ஆலோசனை கேட்க வேண்டும். (Januar 2013) |

| | |
|---|---|
| 4.23 | வேறு விழாக்களோ அல்லது பொதுவிஷயங்களோ முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தால் நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் எந்தவித நிகழ்ச்சிகளும் அன்று நடத்துவது தவிர்க்கப்பட்டுள்ளது. (Januar 2010) |

| | |
|---|---|
| 4.24 | எந்தவித முறையீடுகளையும் நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் ஆராய்ந்து ஒரு பதில் அளிக்க வேண்டுமாயின், அங்கத்தவர் மட்டும், எழுத்து மூலம் பெயர் குறிப்பிட்டு நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும். (Januar 2010) |

| | |
|---|---|
| 4.25 | இருக்கும் சட்டங்களை மாற்றி அமைக்க அல்லது புதிதாக சட்டங்களை கொண்டுவர விரும்புவோர் பொதுக்கூட்டத்திற்கு 2 கிழமைகளுக்கு முன்னரே எழுத்து மூலம் நிர்வாகத்திற்கு அறிவிக்க வேண்டும். (Januar 2013) |

## § 5: பயிற்சி நேரம்

| | |
|---|---|
| 5.1 | ~~மதுபோதையில் வரும் விளையாட்டு வீரர்கள், எந்தவித பயிற்சிகளிலும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். (Januar 2009)~~ (Erstattet af punkt 4.15) |

| | |
|---|---|
| 5.2 | குளியல் அறையிலும், உள் அரங்குகளிலும் புகைப்பித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. (Januar 2009) |

| | |
|---|---|
| 5.3 | பயிற்சியின்போது ஏதாவது தவறுதலாக விளையாட்டு அரங்கில் நடைபெறும் சேதங்களை மட்டும் நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் பொறுப்பேற்கும். ஏனைய தனிப்பட்டவர்கள் செய்யும் சேதங்களுக்கு அவர்களே பொறுப்பாளியாவார்கள். (Januar 1999) |

| | |
|---|---|
| 5.4 | பயிற்சிநேரத்தின் போது ~~13~~ 10 வயதிற்கு உட்பட்டவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் துணையின்றி தனியாக மைதானத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ~~(Januar 2006)~~ (Januar 2018) |

| | |
|---|---|
| 5.5 | ~~பூப்பந்து, கரப்பந்து மற்றும் உதைப்பந்தாட்ட விளையாட்டுகளுக்கு 13 10 வயதிற்கு உட்பட்டவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் துணையின்றி தனியாக மைதானத்திற்குள்~~ |

| | |
|---|---|
| | ~~அனுமதிக்கப்படமாட்டார்கள். இது Danehofskolel மட்டும். (Januar 2006) (Januar 2018)~~ (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2020)<br>Se pkt. 4.9 |

| | |
|---|---|
| 5.6 | நிர்வாகமும் மற்றும் பூப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட, உதைப்பந்தாட்ட தலைவர்களும் சேர்ந்து பயிற்சிநேரத்தை சரிசமமாக பிரிந்து ஒவ்வொரு விளையாட்டிற்கும் வழங்க வேண்டும். (Januar 2018) |

| | |
|---|---|
| 5.7 | ~~விளையாட்டு வீரர்களை ஊக்கிவிற்பதற்காக நிர்வாகத்தால் சோடா வாங்கிக் கொடுத்தல் வேண்டும்.~~ (நீக்கப்பட்ட சட்டம்: Januar 2020) |

| | |
|---|---|
| 5.8 | விருந்தின வீரர்களின் வருகை காலவரை அற்றது. இருப்பினும் விளையாட்டுத் தலைவர்களின் முடிவுக்கு ஏற்ப மாற்றம் ஏற்படும். (Januar 2016)<br><br>ஆனால் நியுபோ நகராட்சிக்குள் வாழும் தமிழர்கள் விருந்தின வீரர்களாக கருதப்படமாட்டார்கள். (Januar 2020) |

## § 6: நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் கலைதல்

| | |
|---|---|
| 6.1 | நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் கலையும் நிலை ஏற்படுமாயின், பொதுக்கூட்டத்தல் வருகை தந்த அங்கத்தவர்களில் 2/3 க்கு மேற்பட்டோரின் ஆமோதித்தலோடு மட்டும்தான் கலைக்கப்படலாம். |

| | |
|---|---|
| 6.2 | தற்சமயம் நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் 6.1ல் கூறியபடி , கலைந்துவிட்டால் கழகத்தின் வங்கி இருப்பு நிதி 2 வருடங்களுக்கு முடக்கப்படும். |

| | |
|---|---|
| 6.3 | ஆனால் 2 வருடங்களுக்குள் மீண்டும் நியுபோ தமிழர் விழையாட்டுக் கழகம் உருவாக்கம் பெற்றால், வங்கியில் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். |

| | |
|---|---|
| 6.4 | 2 வருடங்களுக்குள் புதிய விழையாட்டுக் கழகம் அமையாத பட்சத்தில், அத்தொகை நியுபோ உள்ளூராட்சி மன்றத்தின் விளையாட்டுத்துறையைச் சேரும். |